Koviloor Digital Library

செவ்வலூர்

# மதுவநாயகியம்மை பதிற்றுப் பத்தந்தாதி



ACC NO 38450

Koviloor Digital Library

Koviloor Digital Library

3/3


உ

செவ்வலூர்

# மதுவநாயகியம்மை

# பதிற்றுப்பத் தந்தாதி

(பாராயணத் தொகுப்பு)






ஆசிரியர்

காரைக்குடி

பி. ராம. கு. மெ, மெய்யப்ப செட்டியார்



தொகுப்பாசிரியர் :

கவிச்செம்மல், கவிஞர்கோ

டாக்டர் ரெ: முத்துக்கணேசன்



பிரமோதூத — ஐப்பசி 2

19—10—1990

வெளியீடு :

நகரத்தார்

அருள்திரு மதுக்கார நாச்சியம்மன் திருக்கோயில்

செவ்வலூர்.

Koviloor Digital Library



# செவ்வலூர்

மதுவனாயகியம்மை பதிற்றுப்பத் தந்தாதி என்ற இந்நூலைப் பாதுகாத்து வைத்திருந்து நமக்கு அளித்த, திரு. அ. முத்து. அ. கரு. சண்முகம் செட்டியாரவர்களுக்கு எங்கள் நன்றி!

Koviloor Digital Library

# முன்னுரை

---

தமிழர்கள், தங்கள் தங்கள் வாழ்க்கையில், பல் வேறு இன்பதுன்ப நிகழ்ச்சிகளைக் கண்டனர். அத்தகைய நிகழ்ச்சிகள் அவர்களுடைய வாழ்க்கையைச் செம்மைப் படுத்தியது ; அனுபவ நிறைவை அளித்தது; உள்ளத்தை ஒழுங்குபடுத்தியது. இவ்வாறு ஒழுங்குபடுத்துவதற்கு உறுதுணையாக, அடிப்படைத் தூண்டுகோலாக ஏதோ ஒன்று இருக்க வேண்டுமென்று சிந்தித்தனர். அச் சிந்தனையின் முடிவாக, இறைஉணர்வு தான் உள்புகுந்து உள்ளத்தைப் பண்படுத்துகின்றது என்ற முடிவைப் பெற்றனர். ஆகவே, அவர்கள் இறை அருளை வேண்டி, இறைவனை வழிபடத் திருக்கோயில்களை அமைத்தனர் ; அவனுக்குப் பல்வேறு திரு நாமங்களைச் சூட்டிப் போற்றினர். ஆதியில் அவனைச் சிவனாகக் கண்டனர் ; திருமாலாகத் தேர்ந்து வணங்கினர் ; சிவனை ஆணும் பெண்ணும் கலந்த மாதொருபாகனாகக் கண்டு, அவ் வடிவில் மூழ்கினர். பின் சிவனது அருட்சக்தியைக் கண்டு வியந்தனர் ; அவ்வருட் சக்தியைத் தனியாகப்பெண்மை வடிவில், வடித்து வழிபடலாயினர். இந்த வகையில் அமைந்ததே அம்மை வழிபாடாகும்.

தமிழகத்தில் ஊர்கள் தோறும் அம்மைக்குத் திருக் கோயில்கள் எழுந்தன. புதுக்கோட்டை மாவட்டத்தில் உள்ளது செவ்வலூர் என்ற சிற்றூர். இவ்வூர் குழிபிறை என்ற ஊருக்கு நான்கு கிலோ மீட்டர் தொலைவில் அமைந்துள்ளது. அவ்வூரில் கொலுவிருந்து, மக்களுக்கு அருள்பாலிக்கும் அம்மையே மதுவநாயகி அம்மை யாகும். அவ்வம்மையின் பேரில் பாடிய நூலே மதுவ நாயகி பதிற்றுப்பத் தந்தாதியாகும்.

இந்தப் பக்தி நூலைப் பாடிய ஆசிரியர் பி. ராம. கு. மெ. மெய்யப்ப செட்டியாராவார்; காரைக்குடி ஊரைச் சேர்ந்தவர்; சுமார் ஐம்பது ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்

Koviloor Digital Library

தவர்; மாபெரும் புலவர் வன்றொண்டச் செட்டியாரிடம் பயின்றவர். செவ்வலூர் அம்மையின் திருவருளுக்குப் பாத்திரமாகி, அம்மைக்குப் பதிற்றுப்பத் தந்தாதி பாடியுள்ளார். இவ்வந்தாதி நூறுபாடல்களைக்கொண்டது. பத்துப் பத்துப் பாக்களாக, பத்துவகையான பாவினங்களில் அமைத்துப் பாடுவது பதிற்றுப்பத் தந்தாதியாகும். ஒவ்வொரு பாடலின் கடைசிச் சொல் அல்லது எழுத்து, அடுத்தபாடலின் முதலடியாக வருவது அந்தாதியாகும். இவ்வாறு அந்தாதிமுறையில் நூறுபாடல்களைக் கொண்ட பதிற்றுப்பத் தந்தாதியை, திரு மெய்யப்ப செட்டியார் பாடிச் சிறப்புப் பெற்றிருக்கின்றார். அவர் யாத்துள்ள பாடல்களில் நீரோடையின் தெளிவும், அருவியின் அணி அமைப்பும், கடலின் பக்தி ஆழமும் கண்டு களிக்கலாம். திரு மெய்யப்ப செட்டியார் சைவத்தில் ஆழ்ந்த பக்தியும், சைவம் வளரவேண்டும் என்ற பேரார்வமும் கொண்டவர். சிவனது திருவருளில் திளைத்தவர் மங்கலம் பெருகு செவ்வலூர் மதுவ நாயகியை மீனாட்சி அம்மையாகவே கண்டு போற்றிப் பரவுகிறார். இதனைத் தம் பாடலில்—

வழுதியர் குலத்தோர் ஆற்றிய தவமும்
காஞ்சன மாலைமுன் உஞற்றும்
பழுதறு தவமும் உலகின் மன்பதைகள்
பரிந்துமுன் புரிந்தமா தவமும்
தழையமும் முலையோடு அவதரித்து உலகம்
தாங்கிய தலைவிநின் பதுமக்
கழலிணைப் பரவிச் செவ்வலூர் நினையும்
கருத்தெனக்கு அளித்தல் நின் கடனே! (பாடல் 9)

என்று பாடுவதின் மூலம், சிவனது அருட் சக்தியே மீனாட்சி, மதுவநாயகி அம்மைகளின் திருவடிவங்கள் என நமக்கு உணர்த்துகின்றார் ஆசிரியர்.

Koviloor Digital Library

ஆசிரியர் சைவ சித்தாந்தம் நன்கு கற்றவர். பிற சமயத் தத்துவங்களைக் காட்டிலும், சைவ சித்தாந்தத்தின் பால் மிகவும் பற்றுக் கொண்டவர். ஒரு ஆன்மா, எவ்வகையான, கடினமான, தவங்களை ஏற்றுத் தேர்ந் தாலும், வெற்றி பெற்றாலும், ஆணவமலம் நீங்கினால் தான், அந்த ஆன்மா இறைவன் திருவருளோடு ஒன்றும் என்றே சைவ சித்தாந்தம் பகரும். இக்கருத்தை,

வாழ்வு வரினுங் கதனாலே
 மயங்கி இறுமாப் படையாது
தாழ்வு வரினும் சலித்துமனம்
 தளர்ந்திடா திவ் — விளைவனைத்தும்
ஊழ்,வன் மையினால் விளைவதென
 உன்னிச் சமன்செய் நெறிதாராய்
காழ்,வன் புயத்து மகிடன்உயிர்
 கவிழ்த்தோய் செவ்வல் கனங்குழையே !

(பாடல் 22)

இப்பாடலின் மூலம் வலியுறுத்துகின்றார் ஆசிரியர் ஆணவத்தின முழு உருவாக விளங்கிய மகிடன் உயிரைப் போக்கி வெற்றி கொண்டவள் அல்லவ அம்மை ! அந்த அம்மையிடம் ஆணவம் நீங்க வேண்டு கிறார் ஆசிரியர்.

உலகியலில், மக்கள் தங்கள் வாழ்விற்கு வேண்டிய செல்வத்தைச் சேர்க்க உழைக்கின்றனர் ; இன்பத்தை நாடி ஏகுகின்றனர் ; புகழையும், நிறைவாழ்வையும் தேடிப் போகின்றனர், இவ்வாறு போகின்ற மக்களைக் கண்டு ஆசிரியர் வியக்கின்றார். ஐயோ! இவர்கள் அறியா மையாலல்லவா செயல்படுகின்றார்கள். இவர்கள் செவ் வலூரில் வீற்றிருக்கும் மதுவம்மையின் திருவடியை நாள் தோறும் நினைந்து காதலாகிக் கருணையினால் தொழுவார் களேயானால், அத்துணைச் செல்வமும் புகழும், நிறை வாழ்வும் முந்திவந்து இவர்களைச் சேருமே ! அந்தோ என்னே அறியாமை என வியக்கின்றார்.

Koviloor Digital Library

மகவுதவும் மண்ணுலகில் தனதெனச் செல்வம்
வகையுதவும் மகபதி மதிக்கும்வளன் உதவும்
புகழுதவும் குணனுதவும் தனதருளே மறவாப்
புலனுதவும் நலனுதவும் பொறைநிறையும் உதவும்
இகலறுமிப் பலபோகம் துய்த்துஇகத்தே விரக்தி
எய்த, மல பரிபாகத் திருபதமும் சூட்டி
புக, இரவும் பகலுமிலா ஒருபதத்தே இன்பம்
புணர்த்தும்அடி உதவும் செவ்வல் புரிஉறைபொற்
(பாடல் 20) கொடியே

என ஆசிரியர் பாடுவதின் மூலம், மதுவம்மை நாயகியின் திருவடிபால் கொண்ட, ஆசிரியரின் திருவடிக் காதல் வெளிப்படுகின்ற தல்லவா! மேலும், இறைவன் திருவடிகளை இடைவிடாமல் எண்ணி எண்ணி நினைக்கிறவர்கள் எல்லா வகை இன்பங்களையும் பெற்று நிலைத்து வாழ்வர் என்ற

"மலர்மிசை ஏகினன்
மாணடி சேர்ந்தார்
நிலமிசை நீடு வாழ்வார்!"— எனக் கூறும்

திருக்குறளையும் ஆசிரியர் போற்றக் காண்கின்றோம்.

மேலும் ஆசிரியர் மதுவம்மையை, தம்நூலில் மரகத மலையாகவும், பெருகுசுவை அமுதாகவும், பசுங்கிளியாகவும், மடப்பிடியாகவும், அருட்கடலாகவும் கூறிப் போற்றும் பாங்கு பாராட்டத்தக்கதொன்றாகும். ஆசிரியர் தேவாரம், திருவாசகம், திருஅருட்பா முதலிய இலக்கியங்களில் நன்கு தோய்ந்தவர் என்பதும் பெறப்படுகின்றது. அவ்வவற்றில், தாம்சுவைத்த கருத்துக்களையும், தொடர்களையும் தம்நூலில் பெய்து மகிழக் காணலாம்.

இவ்வந்தாதி நூறு பாடல்களைக் கொண்டது. நூறு பாடல்களையும் ஓதுவதைக் காட்டிலும், குறிப்பாகத் தொகுத்துப் பாடல்களை ஓதவேண்டும்என்றவிருப்பத்தை அன்பர்கள் என்பால் தெரிவித்தனர். அவ்விருப்பத்தின்

Koviloor Digital Library

விளேவே இப்பாராயணத் தொகுப்பாகும். இத்தொகுப்பில், காப்புச்செய்யுள் உள்பட முப்பத்திரண்டு பாடல்கள் தொகுக்கப் பெற்றுள்ளன. இப்பாடல்களேக் காதலோடு ஓதி, உருகி, மதுவம்மையின் பேரருளுக்கு மக்கள் உரியவர்களாக வேண்டுமென்று இறையை இறைஞ்சுகின்றேன்.

இதனே வெளியிட்டுப் போற்றிய அன்பர்களுக்கும், அச்சுப்பிழை திருத்தி உதவிய வித்துவான் திரு வை. சு. ஆறுமுக தேசிகர் அவர்களுக்கும் என் நன்றி!

## வாழ்த்து

முல்லே நறுமணமோ!
முத்தித் திருவிளக்கோ!
சொல்லால் சிலேவடித்த
சுந்தரமோ! — நல்ல,மது
அம்மைமேல் மெய்யப்பன்
ஆக்கினன் அந்தாதிச்
செம்மைத் திருப்பாடலின்
சீர்!

— ரெ. மு

வணக்கம்

ரெ. முத்துக்கணேசன்

தலேவர் : இலக்கியக்கழகம்
காரைக்குடி

Koviloor Digital Library

சிவமே எல்லாம் செறிந்துளதுஅச்
சிவமே என்றும் சிறந்துளது ;

சிவமே இன்ப நிறைந்துளது;
சிவமே அன்பில் கசிந்துளது ;

சிவமே எல்லாம் அறிந்துளது;
சிவமே பதியென்(று) உணர்ந்தடங்கும்

சிவமே எனக்குத் தரல்வேண்டும்
செவ்வல் பதியில் திரிபுரையே.

Koviloor Digital Library



# செவ்வலூர்

# மதுவ நாயகி அம்மை பதிற்றுப்பத்தந்தாதி

## காப்பு

## பிள்ளையார் வாழ்த்து

மங்கலம் பெருகு செவ்வ லூருடைய
　　மதுவ நாயகியென் மரபெலாம்
அங்கண் ஞால மிசைஉய்ய வந்தருளும்
　　அம்மை தன்கவி தழைக்கவே
பங்கையா சனன்ஓர் தாதை சாபவுடல்
　　பாற வாரருள் பரப்பிய
செங்கை ஐந்துடைய கங்கை ஆறுபுனை
　　சென்னி யானையடி முன்னுவாம் !

## சுப்பிரமணியர் வாழ்த்து

சாறு திருத்திய வீதிச் செவ்வலூர்
　　மதுவம்மை தகைமை பாட
மாறு திருத்திய செங்கோல் வழுதியெனத்
　　தடாதகைதன் வயின்வந் தெய்தி
வீறு செருத்தணி செந்தி பழனிமலை
　　மயின்மலையின் மேவி வாழும்
ஆறு திருத்தணி முகத்தெம் ஐயன்இரு
　　சரணன்றே அரணம் அன்றே, 2

---

1. பாற - நீங்க,

2. சாறு - வயல் விளைபொருள், அரண் - பாதுகாப்பு,

Koviloor Digital Library

# நூல்

## வேறு

புரிசடா டவியும் புண்டர நுதலும்
பொருசிலைப் புருவமுங் கருணை
சொரியுமுக் கண்ணும் வதனபங் கயமும்
சூலமும் மழுவுநல் லபய
வரதமும் ஆய கரதல நான்கும்
செவ்வலூர் மதுவநா யகிபொன்
திருவடி மலரும் எனதிரு விழியும்
சிந்தையு நிறைந்துநின் றனவே 1

நின்றனை யுலகம் படைக்கநான் முகனாய்
நிறுத்தவை புரக்கவாள் நேமி
மன்றலந் துழபப் படலையம் புயத்து
மாதவ னாகிமாற் றிடுவான்
ஒன்றிய புகழ்சேர் உருத்திரன் ஆகி
உனதுசீர் மறைகளும் உணரா
பொன்றலில் புகழ்சேர் செவ்வலூர் அமுதே
பொறியிலி உரைக்குமா றெவனே 2

எவளுயிர்க் கிரங்கி மலத்தொடர் அறுப்பாள்
எண்ணிஐந் தொழில்இயற் றிடுவாள்
எவள்தன(து), ஒளியால் இரவியை மதியை
எண்ணுமங் கியை,விளக் கிடுவாள்
எவள்தன(து) அடியை எண்ணிய அடியர்,
எண்ணிய எண்ணியாங்(கு) அளிப்பாள்
அவள்எமைப் புரப்பாள் செவ்வலூர் இடத்தே
அருளுருக் கொண்ட ஆ ரணியே 3

---

1. சடாடவி—சடையாகிய காடு
2. துழபப்படலை —துளசிமாலை
3 புரப்பாள்—காப்பாள்

Koviloor Digital Library

ஆரணப் பகுப்பும் ஆகமப் பரப்பும்
ஆசறத் தெளிந்துளம் அடங்கும்
பூரணத் தவத்துப் புலாரிகட் கலது
பொருப்பென மருப்பெனப் பணைத்த
வாரணத் தனத்து மடந்தையர் மோக
வலைப்படும் எனக்கும்வந் துறுமோ
தாரணிக்(கு) இனிய செவ்வலூர் உடைய
சாம்பவி மதுக்கொடி சரணே. 4

சரண்என உனது சரணபங் கயமே
சந்ததம் நினைந்துநெக் குருகும்
புரணவன் புடைய புண்ணியர் பணியிப்
புலையனேற்(கு) அருளுநாள் உளதோ?
கருணைஅங் கடலே! கடையனேன் மரபின்
களைகணே! கண்ணகல் ஞாலத்(து)
அரணமே செவ்வற் பதியில்வீற் றிருக்கும்
அன்னமே! அருமறைப் பொருளே! 5

மறைப்பொருள் உள்ளவா(று) உணர்ந்து உனையே
மனத்துற நினைந்துதற் போதம்
இறப்பஆனந்த உத்தியில் திளைக்கும்
இன்பவாழ்(வு) எனக்குவந் துறுமோ?
பிறப்பெனும் இரியாப் பெரும்பிணி இரிப்பான்
பெருக்கெடுத்(து) ஒழுகுதெள் அமுதே!
அறக்கிளை கிளைத்துச் செவ்வலம் பதியில்
அகிலமும் பழுத்தபொன் கொடியே! 6

---

4. ஆரணம்—வேதம்

5 புரணவன்புடைய - நிறைந்த அன்புடைய பூரணம் என்பது எதுகை நோக்கி புரணம் ஆயிற்று.
அரணம் - உலகத்திற்கே பாதுகாப்பான

6 இரிப்பான்—அழிப்பான்

Koviloor Digital Library

கொடியிடைக் கருங்கண் செய்யவாய்ப் பசுந்தோள்
வெண்ணகைக் குவிமுலைக் கோலப்
பிடிநடைச் சுவணப் பிறைநுதல் மடவார்
பேரெழில் குடைந்தனன் தமியேன்
படியெலாம் பழுத்த பசியகற் பகமே!
பாகசா தனன்முதல் தேவர்
முடிகெழு சரண பங்கயச் செவ்வல்
பதியில்வாழ் முடிவிலா முதலே! 7

முடிவிலா முதலே! பழமறைக் கொழுந்தே!
மூர்க்கனென்(று) இகழ்ந்திடாது அடியேன்
குடிமுழு(து) ஆண்ட பெருங்குஞ சலமே!
குஞ்சரக் குருளைபால் நுகர
அடலரி அளிக்கும் செவ்வலம் பதியில்
அரசுவீற் றிருக்குநின் கருணை
வடிவம்உள் நினைந்து மனேலயம் பெறுமெய்
வாழ்வுமெற்(கு) உளதுகொல் வழுத்தே 8

வழுதியர் குலத்தோர் ஆற்றிய தவமும்
காஞ்சன மாலைமுன் உஞற்றும்
பழுதறு தவமும் உலகின்மன் பதைகள்
பரிந்துமுன் புரிந்தமா தவமும்
தழையமும் முலையோ(டு) அவதரித்(து) உலகம்
தாங்கிய தலைவிநின் பதுமக்
கழலிணை பரவிச் செவ்வலூர் நினையுங்
கருத்தெனக்(கு) அளித்தல்நின் கடனே 9

---

7 பாகசாதனன் - இந்திரன்.

8 அசலம் - மலை

9 பதுமம்-தாமரை

Koviloor Digital Library

கடல்நிறம் படைத்தசெங் கண்மால் தொழுநின்
கழலிணை கருத்திடை நினையேன்
விடயவா தனையில் கழிந்தநின் அடியர்
மேவிய சங்கமும் விரும்பேன்
மடநடை மடவார் போகமே பொருளா
மதித்தனன் மறலியைக் கடக்கும்
படியொரு நெறியும் உணர்ந்திலேன் செவ்வல்
பதியுறை மதுவநா யகியே. 10

## வேறு

தோகைமயில் நடமாடக் களிவண்டு ஞிமிறும்
சுரும்பினமும் இசைபாடுந் துருமமலி செவ்வல்
போகநகர் நிகரில்லாப் புனிதநக ரிடத்தே
பொறியிலியெங் குடிமுழுதும் பரக்கஎழுந் தருளும்
பாகனைய மொழிக்கரும்பை அடியருளம் மடுக்கும்
பசுந்தேனைக் கதிஅளிக்கும் படியமர்கற் பகத்தை
ஏகமென அகிலமென இருந்தவளைப் பரவி
இரவுபகல் ஒருவுமிடத்(து) இருத்தலவர்க்கெளிதே. 11

எளிதடியர் தமைத்தேடி அருள்புரிதல் விரதம்
எனக்கொண்ட நீஇருப்ப நறுந்தளிர்கள் இருப்ப
நளிர்புனலும் எவ்விடத்தும் இருப்பஒரு தமியேன்
நாள்முழுது மடந்தையர் கணசையால் கழித்தேன்
அளியனேனைக் கைவிடேல்; வேடமலா துளத்தே
அன்பின்மை நீஅறிக; உலகறியா அன்றே
தெளியுமனத்து இருள்ஒழிக்கும் சுடர்மணித்தீ பிகையே
செவ்வலூர் மருவியசச் சிதானந்தப் பிழம்பே! 12

---

10 மறலி-எமன்

11. ஞிமிறும் - ஒலிக்கும்.

12. தீபிகை - விளக்கு

Koviloor Digital Library

பிளவுமதி தவழுமுடி மரகதமா மலையே!
பிறங்கும்அடி யவருளத்தே பெருகுசுவை அமுதே
தளவமுகை யனையநகை உடையபசுங் கிளியே!
தாயாகி அகிலசரா சரமுமளித் தவளே!
புளகமுலைக் கோடிரண்டு பொருத்தமடப் பிடியே!
பொறியிலியென் குடிமுழுதும் புரக்குமருட் கடலே!
வளமருவு செவ்வல்நகர் உடையமதுக் கொடியே!
வழங்குதிபுன் மதச்சேற்றில் அழுந்தாத வரமே 13

வரமெனக்கங்(கு) அதுசெவ்வல் பதியிலருள் கொழிக்கு
மதுவநா யகிஅளித்தல் வேண்டுமடந் தையர்கள்
புரிநரம்பின் இசைபாட அரம்பயர்கள் ஆடப்
பூந்தருவின் நீழலிடைப் பொலிவாழ்வுற் றிடினும்
நிரையவரி சை,யிற்கிடந்து சுழன்றிடினும் அலது
நேரிழையர் மோகசா கரத்திடைமூழ் கிடினும்
விரவுபுழு வாதியபுன் பிறப்பினிடைப் புகினும்
வேண்டுவநின் திருவடியில் வீடாத விருப்பே 14

விருப்பமொரு கணமேனும் உன்னடிக்கண் நிறுவேன்
வெற்றுடலே பொருளாக விழைந்துமனங்
களிப்பேன்
கருப்பனுகைத் திடவருபுங் கவத்தினுள மருண்டேகடைப்
பட்டமடந் தையரே கதிஎன்று திரிவேன்
செருப்பயின்ற மகிடனுயிர் அழித்தமரற் புரந்ததிரி
புரையென் றுனைப்பாடிச் செவ்வலூர் அடைந்தே
பொருப்பனைய சிகரசின கரம்புகுந்து பரவேன்
பொறியிலியென் கடைநாட்கும் புகலுண்டோ
புகலே 15

---

15. நிறுவேன்—நிலைநிறுத்தல் செய்யேன்
கருப்பன் உகைத்திட—கருப்பு வில்லையுடைய மன்மதன் உணர்வை எழுப்பிட

Koviloor Digital Library

புகலிடமிங்(கு) உனையன்றிப் பிறிதொன்றும் உணரேன்
புண்ணியஞ்சேர் செவ்வலூர் உடையதிரி புரையே!
பகையுறவு விருப்புவெறுப்(பு) அறத்துயில் வோன்தன்
கைப்படுபொரு ளிற்கிரியை யொருவிலரா
கிப்பகையும்
இகலும்மகிழ்ச் சியும்துயரும் மருவிமலப் பசுவும்
எண்ணரிய பதியுமொரு பொருளெனவே பிதற்றிச்
சகமனைத்தும் பிராந்தியெனத் தடுமாறும் சிலர்தம்
சழக்கொழிந்து சித்தாந்த சைவநெறி உறற்கே. 16

சைவமெனும் சித்தாந்தத் தனிநெறி யேகதியைத்
தருநெறியாம் எனவும்அடி சார்ந்தவரைப் புரக்கும்
தெய்வமும்நீ யே!எனவும் ஏனையவன் மதமும்
செறிமலத்த மலினமும் அபக்குவராம் சீலர்
உய்வகையங்(கு) அவர்வினையின் சோபானத் தேற்றம்
உறக்கருதுநீ அமைத்ததெனவும்உணர்ந்தனன் நான்!
சைவலப்பூங் குழல்உமையே! செவ்வலூர் அரசே!
சண்டனையும் மகிடனையும் தகர்த்தபுரா தனியே! 17

தனியாகிப் பலவாகிச் சத்தாகி அசத்தாம்
சகமுழுது மாயையினும், தருமூலாய் அன்பர்
மனமொழி யாக்கையில் புரியும்வழி பாட்டினன்றி
மாமறைக்கும் திருமாற்கும் மலரவார்க்கும் அரிதாய்
இனியபிரிதிவிஆதிஆருறுங் கடந்தே
இலங்கொளியாய் அறிவிலியென் இதயத்தும்-இருக்கும்
புனையிழையைச் செவ்வலூர் உடையதிரி புரையைப்
போற்றுதார் உடலன்றே பொறையாம் இப்புவிக்கே18

---

16. உறற்கே - அடைவதற்கே

17. செறிமலத்த - மூவகைமலங்கள்செறிந்த, மலினம் - மாசு

18. பிரிதிவிஆதி-பிரிதிவி முதலாக, ஆருறும் - முத்தாறு தத்துவமும்

Koviloor Digital Library

புவியனைத்துந் தனிபூத்த பூங்கொம்பே! ஞானப்
புணரியே! தொண்டர்உளப் புண்டரிகம் விரிக்கும்
அவிரொளியாய் ஞானஆ னந்தவடி வாகி
அண்டமாய் அண்டத்துக்(கு) அப்புறமாய் நின்ற
குவிமுலைச்சிற் றிடைக்கரும்பே! அரும்பனைய-முறுவல்
குணக்குன்றே! மன் இமயக் குன்றளித்த பிடியே!
சிவமணஞ்சேர் செவ்வல்நகர்க் குமரியே உன்னைத்
தெரிசித்தார்க் (கு) இனியவனத் தென்புலக்கோ மகளே! 19

மகவுதவும் மண்ணுலகில் தனதனெச் செல்வ
வகையுதவும் மகபதியு மதிக்கும்வளன் உதவும்
புகழுதவும் குணனுதவும் தனதருளை மறவாப்
புலனுதவும் நலனுதவும் பொறைநிறையும் உதவும்
இகலறுமிப் பலபோகம் துய்த்துஇகத்தே விரத்தி
எய்த,மல பரிபாகத் திருபதமும் சூட்டி
புக,இரவும் பகலுமிலா ஒருபதத்தே இன்பம்
புணர்த்தும் அடிஉதவும் செவ்வல், புரிஉறை பொற்கொடியே! 20

## வேறு

கடக்கல் ஆகாப் பெருந்துயரம்
கடக்கு நெறியைக் கருதாதே
இடக்கென்(று) என்பு கறித்தொழுகும்
வெய்ய குருதி நுகர்காயின்
தடக்கை யொழுக்கென் றுழல்கின்ற
தமியேன் உய்யும் தரமுளவோ
படப்பை நாகத் தணைநெடுமால்
பணியுஞ் செவ்வல் பதிவாழ்வே! 21

---

19 புணரி-கடல்

20 மகபதி-இந்திரன்

21. கறித்து - கடித்தும்

Koviloor Digital Library

வாழ்வு வரினங் கதனாலே
    மயங்கி இறுமாப் படையாது
தாழ்வு வரினும் சலித்துமனம்
    தளர்ந்திடா திவ்விலை வனைத்தும்
ஊழ்,வன் மையினால் விளைவதென
    உன்னிச் சமஞ்செய் நெறிதாராய்
காழ்,வன் புயத்து மகிடனுயிர்
    கவிழ்த்தோய் செவ்வல் கனங்குழையே! 22

குழையும் மனமும், நின்வடிவே
    குறிக்கும் விழியும். உனதடியில்
விழையும் அன்பும், நினதடியர்
    மேய அவைக்கண் புகுந்திறைஞ்சிப்
பழகு நட்பும், எனக்கென்று
    பாலிப் பாயோ! செவ்வனகர்க்
கழையும் மலரும் பொறுத்ததிருக்
    கரத்தாய் கனிஅத ரத்தாயே! 23

தாய்அன் புடைய தந்தை,கிளை,
    தாரம், தனையர், தளர்வெய்த
நோயும் பேயும் கடுநாயும்
    நொய்ய நரியும் தமதென்னுங்
காயங் கலையக் கொடுங்கூற்றம்
    கறுக்கும் பொழுதுஉன் கருணைவடி(வு)
ஆயும் பரிசு செவ்வலணங்
    காசே அளித்தல் கடனுனக்கே. 24

---

22. காழ் - மனஉறுதி

23. கழையும்—கரும்பும்

Koviloor Digital Library

கடலைக் கடக்கக் கருதினர்கள்
கலனைப் பெறுவான் நினையாதே
தடவுக் கரத்தால் கடப்பலெனப்
புகுந்து தளரும் அதுபோலும்
முடவுப் படப்பை பணிச்செவ்வல்
மூவா முதலே! உனையன்றிப்
படுமுற் பவத்த பசுக்கள்பிற
பசுக்கள் தம்மைப் பரவுதலே 25

பரசும் அடியர் அகத்திருளைப்
பருகு ஞானப் பரஞ்சுடராம்
பிரச மலர்ப்பூந் தடங்கள்பல
பிறங்கும் செவ்வல் பெருமாட்டி
விரைசெய் கமலச் சரண் இறைஞ்சு
மிக்கார்க்(கு) உலகம் தனிபுரக்கும்
அரசும் பொருளன்(று) அயன்பதமும்
அரி,தன் பதமும் அற்றுமே 26

அற்றூர் சுற்றத் தொடர்பனைத்தும்
அடைந்தார் அரணென்(று) அடியரவை
கற்றூர் ஆக முதற்கலைகள்
கடந்தார் வினைகள் கதியடையப்
பெற்றூர் தொகையை இனைத்தென்னப்
பேச யான்ஆர்? பிறிதுலகில்
பற்றூர் எனக்குன் கழல்அலது
செவ்வல் பதியில் பரசிவையே. 27

---

25 கலன் – கப்பல், படப்பை-பூந்தோட்டம், உற்பவம்-உற்பத்தியான பசு-உயிர்கள்

Koviloor Digital Library

சிவமே எல்லாம் செறிந்துளதுஅச்
 சிவமே என்றும் சிறந்துளது ;
சிவமே இன்ப நிறைந்துளது;
 சிவமே அன்பில் கசிந்துளது ;
சிவமே எல்லாம் அறிந்துளது;
 சிவமே பதியென்(று) உணர்ந்தடங்கும்
சிவமே எனக்குத் தரல்வேண்டும்
 செவ்வல் பதியில் திரிபுரையே 28

புரையற் றிருக்கும் அடியர்மனப்
 போதில் இருக்கும் உனதுசரண்,
கரையற் றிருக்கும் பேராசைக்
 கடலில் கிடந்து தடுமாறி
நிரையத் துயருக்(கு) இலக்காக
 நின்ற தமியேன் மனக்கல்லில்
உரையற்(று) உணர்வற்(று) இடும்செவ்வல்
 உமையே! எங்ஙன் உறத்தகுமே! 29

தகுவர் இறைஞ்சு மகிடமுகச்
 சழக்கன் தனைச்சண் டனைத்தந்திது
புகலென்(று) உனது சரண்அடைந்த
 புத்தேள் குலத்தைப் புரந்தனையால்
அகலும் தெவ்வாம் ஐவரிடைக்
 கிடந்தே நின்னை அடைந்தளனை
அகிலம் அளித்த செவ்வலணங்
 கரசே அளித்தல் கடனமே 30

29. சரண்—பாதம்,
எங்ஙன் உறத்தகுமே —எவ்வாறு தங்குதற்கு
தகுதியுடையதாகும்
30 தகுவர் —அசுரன், அகலும்—நீக்கும்
தெவ்வாம்ஜவர் —பகைவர்களாகிய ஐம்புலன்கள்

Koviloor Digital Library



Koviloor Digital Library

காரைக்குடி

கவிச்செம்மல், கவிஞர்கோ டாக்டர்

ரெ. முத்துக்கணேசனார்

அருளிய

# அம்மை திருப்பல்லாண்டு

Koviloor Digital Library

# அம்மை திருப்பல்லாண்டு

1 நறுந்தளிரே! மருக்கொழுந்தே! மரகதமே!
நாட்காலை பசுமை பூப்பாய் ;
குறுந்தளிராம் கொடிவீட்டில் பிச்சியெனும்
குறும்பூவாய் இன்பம் ஈவாய் ;
சிறந்தொளிசேர் செம்பூவும் பசுந்தழையும்
சேர்ந்தனபோல் சிவமும் நீயும்
அறந்தழைக்க நேர்பாதி கலந்தகோல
அழகினுக்கா யிரம்பல் லாண்டு.

2 விடிவறியா உயிர்கள்பால், மீன்போல
விழிநோக்கி அருளே செய்யும்
கடிகமழும் மலர்க்கூந்தல் கயல்விழியே!
கண்களிக்க அள்ளி யுண்டே
அடிமுதலாய் அழகனை நீ அணைந்தமையால்
அழகம்மை ஆனாய் நீயோ !
படிஎழுத வொண்ணாத பல்வளையாய்!
பரிசினுக்கா யிரம்பல் லாண்டு.

3 முல்லைமுதல் மக்களுயிர் அத்தனைக்கும்
மூலத்தாய் நீயே யன்றோ !
எல்லையிலாக் காலவினை சிலந்தியாக
எழுப்பிவிடும் துன்பப் பின்னல்
தொல்லையினில் வீழுமுயிர்த் துயர்துடைக்கத்
தோகையுரு உமையு மாவாய் ;
அல்லலிலாப் பெருவாழ்வே! அருமருந்தே !
அன்பினுக்கா யிரம்பல் லாண்டு.

Koviloor Digital Library

4 படியறியோம்; நின்பதத்தின் பாங்கறியோம்;
பல்வேறு வினைகள் தம்மால்
இடியுருகும் கொடுஞ்செயல்கள் இழைத்த போதும்
இன்னுயிர்பால் கனிவு கண்டோம்;
படிவளரப் பொருளீந்து உணவூட்டிப்
பார்புரக்கும் முத்தம் மையே!
அடிதொழுவோம் அடைக்கலங்காண் அறம் வளர்த்தாய்!
அருளினுக்கா யிரம்பல் லாண்டு.

5 வெற்றியினைச் செருக்கோடு விரும்பிநின்றேன்
விளையாட்டாய்த் தோல்வி தந்தே
பற்றுடைய ஆணவத்தின் முனைமழுங்கப்
பனிமுறுவல் செய்த எந்தாய்!
வெற்றுருவக் கருங்கல்லாய்க் கிடந்தநெஞ்சை
வெண்கமலப் பூவாய் ஏற்றுப்
பொற்புருவாய்! அருள்தருவாய்! பூங்கோதாய்!
புதுமைக்கா யிரம்பல் லாண்டு.

6 சீர்பெரிய நிலமெல்லாம் முகில்வழங்கும்
சிறுதுளிக்கே ஏங்கு மாப்போல்,
நீர்பெருக்கும் கடலனைத்தும் நிறையமுத
நிலவொளிக்கே ஏங்கு மாப்போல்,
பேர்பெரியாய்! உனைவணங்காப் பித்தனுமென்
பிஞ்சன்புக் கேங்கு கின்றாய்;
ஏர்சிறக்கும் ஏலவார்பூங் குழலம்மை
எளிமைக்கா யிரம்பல் லாண்டு.

7 நீர்நிலத்தில் மதுப்பூவைத் தென்றலுமே
நிதந்தழுவ மணமே கொள்ளும்;
தேர்புலத்தால் கவியமுதம் உண்டவுள்ளம்
தெளிந்தறிவு பெற்றே வாழும்;


Koviloor Digital Library

பேரருளே! அஞ்செழுத்தை நெஞ்சகத்தே
பிரிந்தறியா எளியன் தன்னைப்
பாரதனுள் கண்பாராய் பால்மொழியே!
பரிவினுக்கா யிரம்பல் லாண்டு.

8 உன்னடியைப் பரவுதற்கு மண்ணகந்தான்
ஒளிர்பூவைப் பூத்துப் போற்றும்;
மின்னுபெரும் ஆழியொடு வானகமும்
மின்முத்தால் நீரால் போற்றும்;
தின்னவரு செந்தழலோ அகிற்புகையைத்
தென்றலுடன் தூவிப் போற்றும்;
பொன்னடியை எங்ஙனம்நான் போற்றிடுவேன்
புகழினுக்கா யிரம்பல் லாண்டு.

9 மண்ணகத்தில் படிவதனைச் சிற்பியர்கள்
மாண்புறவே சமைத்துத் தந்தார் ;
மண்ணகத்தில் ஓவியர்கள் வரைந்துன்றன்
மாணடியைத் தொழுது நின்றார் ;
எண்ணகத்தில் உள்மலரும் கவிஇதழால்
எழிலடியைத் தொட்டேன் ; எந்தம்
பண்ணகத்துத் தமிழேற்பாய் பண்மொழியே!
பண்பினுக்கா யிரம்பல் லாண்டு.

10 இருள்இரியச் சுடர்வயிரம் இணைந்தமுடி
அழகினுக்குத் திருப்பல்லாண்டு!
பொருள்விரிக்கும் விழிகளொடு புதுமுறுவல்
அழகினுக்குத் திருப்பல் லாண்டு!
மருளகற்றிச் சிவம்கலந்த மணக்கோல
அழகினுக்குத் திருப்பல் லாண்டு!
அருள்பொழியும் அங்கயற்கண் அம்மைக்குப்
பல்லாண்டு திருப்பல லாண்டே!


KOVILOOR ANDAVAR LIBRARY KOVILOOR
38450

Koviloor Digital Library

Koviloor Digital Library